உ
சிவமயம்

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28 ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூ௩. | யாழ்ப்பாணம்:- விகிர்தி௵ பங்குனி௴ உ௮உ செவ்வாய்க்கிழமை (10 ஏப்ரல் 1951) [இல். - ௩.]



L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


## சிவஞானபோதமும்
### ஆக்ஷேப நிராகரணமும் (ஆங்கிலத்தில்)

( ஓர் வித்தியாவமாணவன் வரைவது )

இந்நூலை ஆக்கியவர் யாழ்ப்பாணம் புலோலிச் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரமாவர். பண்டைக்காலத்திலே சனற்குமாரர் முதலிய முனிசிரேட்டர்களாலும் இடைக்காலத்தே சமயகுரவர் சந்தானகுரவர் திருமூலர் பட்டினத்தடிகள் சேக்கிழார் சுவாமிகள் முதலிய மகான்களாலும் பிற்காலத்துத் தாயுமான சுவாமிகள் சிவஞான முனிவர் ஆறுமுக நாவலர் முதலிய பெரியோராலும் போற்றி வளர்க்கப்பட்டு வந்த சித்தாந்த சைவ சமயத்தை அவ்வான்றோரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி இக்காலத்தில் பல நூல்கள் இயற்றுவதாலும் சற்போதனை செய்தல் முதலிய முறைகளாலும் வளர்த்துக் காத்து வருபவராகிய இப்பெரியார் இயற்றிய நூலுக்கு, நான்முகம் எழுதிய தருமபுர ஆதீனத்துத் தம்பிரான் சுவாமிகள் போன்ற பெரியோரேயன்றி எம்போலியர்கள் அபிப்பிராயம் எழுத அருகரல்லர். ஆயினும் அபிப்பிராயங்கேட்ட எமது நண்பராகிய பண்டிதரின் ஆஞ்ஞையை மறக்க இயலாது இதை வரையலானேம்.

இந்நூல் உருவளவிற் சிறியதாயினும் பொருளளவில் மிகப் பெரியது. பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவின் முதலிலுந் தோற்றுவாயாக இரௌரவாகமத்துப் பாச விமோசனப் படலத்திலே காணப்படுஞ் சிவஞான போத சூத்திரங்களைத் தழுவித் தமிழுலகுய்யும்வண்ணந் தமிழிலே மெய்கண்ட தேவ நாயனாரால் யாக்கப்பெற்ற தமிழ்ச் சிவஞான போத சூத்திரங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் பதப் பொருள் அவ்வப்பிரிவின முடிவில் தமிழ்நூல்களை அதிகம் பயிலாதவர்களும் விளங்கக்கூடிய இலகுவான நீர் தமிழ்ப் பாஷையிலே சூத்திரங்களில் வெளிப்படையாகச் சொல்லப்படாத சொல்லெச்சம் பொருளெச்சங்களும், மெய்கண்டதேவர் கருத்துக்கு மாறுபடாத முறையிலே வருவித்து எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பதவுரை இக்காலத்தே ஆங்கிலக் கல்வியோடு தமிழையும் இரண்டாவது பாஷையாக ஒரு அளவிற்கே கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இதை வாசிப்பவர்களுக்குச் சிவஞான போதம் படித்தாலென்ன அறிவடைவோமென்பதைச் சுருக்கமாக அறியமுடியும்.

இச் சிறு புத்தகத்திலே தமிழிற் காணப்படுவது இவ்வளவுந்தான். மிகுதி ஆங்கிலத்தி லெழுதப்பட்டிருக்கிறது. சூத்திரங்களின் சாரமாக அவற்றிலுள்ள முக்கியமான தத்துவ ஞான விஷயங்

தொடர்ச்சி 3-ம் பக்கம்


இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.


## உ
## தோத்திரம்

முடித்தலை யிமையோர் வடித்தமிழ்ங் கூடன் முதல்வர்பொன் அடித்தலத் [திறைஞ்சப்
படித்தலத் தடைய நெருக்கலுந் திருக்கண் பார்த்திட நந்திசென் றடித்த
தொடித்தலைப் பிரம்பு கமழ்வன கமலத் தொடையலுஞ் சுரும்புணு தரும்பு
பிடித்தலர் துளவுங் கற்பகம் பூத்த பெருவிரைக் குழங்கன்மாலையுமே.

கிரீடத்தை யணிந்த தலையினையுடைய தேவர்கள் தெள்ளிய தமிழ் வழங்குகின்ற நான்மாடக் கூடல் எனப்படும் மதுரைப்பதியிற் கோயில் கொண்டருளிய தலைவராகிய சொக்கலிங்கப் பெருமானுடைய பொன் போன்ற அரிய திருவடிகளில் வீழ்ந்து வணங்கும் வண்ணம், இப்பூமியிலுள்ள மதுரைத் திருக்கோயிலில் வந்து நெருக்குண்ண, (அங்ஙனம் நெருக்குறுதலை இறைவனுடைய) திருக்கண் குறிப்பிட, (அக்கட்குறிப்பை யுணர்ந்து) திருநந்திதேவர் சென்று, அத்தேவர்களை ஒதுங்கி நிற்கும்படி (மெல்லப்) புடைத்த பூணிட்ட நுதியையுடைய (பொற்பிரம்பில்) மணப்பன செந்தாமரைப் பூமாலையின் மணமும், வண்டுகள் படிதலின்றி அரும்புகொண்டு மலர்கின்ற துளசிப் பூமாலையின் மணமும், கற்பகதருப்பூத்த குழல்கன்மாலையின் மணமுமாம் என்பது பொருள்.

இமையோர் - தேவர், படித்தலம் - பூமியிலுள்ள புண்ணிய தலம்; தொடித்தலை - பூணிட்ட நுனியையுடைய; கமழ்தல் - மணத்தல்; வாசம் வீசுதல்; கமலத்தொடையல் - தாமரைப்பூ மாலை, (பிரமதேவனுக்குரியது); துளசிமாலை திருமாலுக்குரியது; கற்பகப்பூமாலை இந்திரனுக்குரியது; குழங்கல் மாலையினத்திலொன்று. ஆலவாய்ப்பெருமானை அரி பிரமேந்திராதி தேவர்கள் வந்து பணிவர் என்றபடி. (65)

## எஸ். எஸ். ஸி. பரீட்சை

சென்ற டிசெம்பர் மாசத்தில் நிகழ்ந்த பரீட்சைப்பேற்றின் பின், குறித்த பரீட்சை நடத்தப்படும் முறையிற் பரீட்சார்த்திகள், உபாத்தியாயர்கள், பெற்றோர் முதலானோர்க்கு நம்பிக்கைப்பட்டு விட்டதெனவும், இலங்கையிலே இப்படியான பிரவேசப் பரீட்சைகளிற் சித்தியடையும் மாணவர்கள் விகிதம் நூற்றிற்கு எழுபது வரை யுண்டென்றும், இலங்கையில் நடத்தப்படும் இந்தப் பரீட்சையிற் சித்திபெற்றோர் விகிதம் ஆண்டுதோறும் குறைந்து இந்த ஆண்டில் நூற்றுக்குப் பதினாறு விகிதமாக விட்டதெனவும், இப்படிக் குறைவுற்றமைக்குத் தக்க காரணம் விரைவிற் காட்டப்படாவிட்டால், இப்பொழுதுள்ள பிரதிக் கல்வி மந்திரிக்கு விஷயங்களை யெடுத்துக்காட்டி இதையிட்டு விசாரணை செய்தற்காகிய ஒழுங்கு செய்யும்படி தெரிவிக்க வேண்டுமெனவும், அகில இலங்கை ஆசிரிய சங்கத் தலைவராகிய திரு. A. E. தம்பர் தெரிவிக்கின்றார்.

## வடமராட்சிக்
## கிராம முன்னேற்றச் சங்கம்

மேற்படி சங்கத்தின் இரண்டாம் வருடாந்தப் பொதுக்கூட்டம் 7 - 4 - 51-ல் வடமராட்சிப் பிரிவுக் காரியாதிகாரியின் கந்தோரில் நடைபெற்றது. கிராம முன்னேற்ற உத்தியோகஸ்தரும், பிரிவுக் காரியாதிகாரியும் சிறந்த சொற்பொழிவாற்றினர். பின் புது வருடத்திற்குரிய உத்தியோகஸ்தர்களும் அங்கத்தவர்களும் தெரிவு செய்யப் பெற்றனர். —நிருப.

## திருமுறைத் திருநாள்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் நிகழும் வருஷம் ஆண்டு பங்குனித்திங்கள் 31-ம் நாள் (13-4-51) வெள்ளிக்கிழமை தொடங்கி ஆறு நாட்களுக்குத் திருமுறை விழா, சிறப்பாகக் கொண்டாடப்பெறும். திரு. எஸ். சுப்பராய முதலியார் தலைமையில்பல அறிஞர்கள் தேவார திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளிலே புதைந்து கிடக்கும் அரிய விஷயங்களில் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

## அஜாரசபுரம் விவேகானந்த வித்தியாலயப் பரிசளிப்புவிழா

இந்த மீ 17 ம் உ (30-3-51) வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணி தொடக்கம் ஷை வித்தியாலய மண்டபத்தில் திரு. ம. ஸ்ரீகாந்தா C. C. S. தலைமையில் பரிசளிப்புவிழா நடைபெற்றது, மாணவர் வந்தனப்பாவும், வழக்கறிஞர் S. நடராசா J. P. U. M. வரவேற்புரையுங்கூறினர். தலைவர் தம்முன்னுரையில் தமிழ் கற்பதின் அவசியத்தைப்பற்றி மிகு தெளிவாகப் பேசிச் சபையோரை மகிழ்வித்தனர். தலைமையாசிரியராற் பாடசாலை அறிக்கை வாசிக்கப்பட்டபின் ஸ்ரீமதி ஸ்ரீகாந்தா அவர்கள் பரிசுகளை வழங்கினர். நிருப.

## அகில இலங்கைச் சைவ இளைஞர்
## மத்திய மகாசபை

30-3-51 வெள்ளிக்கிழமைமாலை 7 மணியளவில் மாவைக் கந்தசுவாமி கோவில் வசந்தமண்டபத்தில் அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையின் விசேட பொதுக் கூட்டமொன்று திரு. வி. வீரசிங்கம் பி. ஏ., ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. திரு. சி. நாகையா பி. ஏ. திரு. ச. சோமசுந்தரம் பி. ஏ, பிரமஸ்ரீ சு. முத்துச்சுவாமிக் குருக்கள், திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின, இந்து ஆலய பரிபாலன சபையார் ஆங்கிலத்தில் வெளியிட்ட அறிக்கை தமிழில் வெளிவந்தபின், சைவத் தமிழ் மக்கள் படித்தறிந்து அபிப்பிராயங் கூறும்வரையில் அரசினர் சட்டமியற்றக்கூடாதென்னும் கருத்தமைந்த ஓர் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

— நிருப.

## ஈழநாட்டு ஸ்தலங்கள்

### திருக்கோணமலை

கீழ் மாகாணத்தைச் சேர்ந்த திருக்கோணமலையிலுள்ள புராதன க்ஷேத்திரம். சம்பந்தசுவாமிகளால் தேவாரம் பாடியருளப்பெற்ற புனித ஸ்தலம். இது தென் கைலாயம், சுவாமிமலை, திருக்கோணமலை எனவும் கூறப்படும். திருக்கோணமலை சிறந்த துறைமுகம். புகையிரதஸ்தானமும் உண்டு. குளக்கோட்டன் என்னும் சோழவரச குமாரன் இக்கோயிலைக் கட்டினன் எனக் கூறப்படுகிறது. சோழ, பாண்டிய அரசர்களும், யாழ்ப்பாணத்தரசர்களும் இக்கோயிலை ஆதரித்துவந்தனர். இவ்வாலயம் போத்துக்கீசரால் அழிக்கப்பட்டது. ஆலயம் இருந்த இடத்துக்கு இப்பொழுது பூசை செய்யப்பட்டு வருகின்றது. இவ்விடத்தில் ஓர் ஆலயம் கட்டுவதற்குச் சைவத் தொண்டர்கள் முயன்று வருகின்றனர்.

### கன்னியா தீர்த்தம்

திருக்கோணமலையிலிருந்து 5 மைல் தூரத்தில் கன்னியா என்னும் வெந்நீரூற்றுக்கள் உண்டு. ஒன்றுக்கொன்று அதிக உஷ்ணமாயிருக்கும். ஆறு ஊற்றுக்கள் உண்டு. இராவணன் தன் தாயாருக்கு அபரக்கிரியைகள் இவ்விடத்தில் செய்வித்தான் என்பது ஐதிகம்.

### முன்னேஸ்வரம்

இது வட மேல் மாகாணத்திலுள்ள புராதன சிவாலயம். சிலாபம் புகையிரதஸ்தானத்திலிருந்து 2 மைல் தூரத்தில் உள்ளது. 14ம் நூற்றாண்டுக்கு முன்னரே புகழுடன் விளங்கிய ஸ்தலம். இதற்குச் சிங்கள அரசர்களும், கண்டியரசர்களும் மானியம் அளித்து ஆதரித்து வந்தனர். போர்த்துக்கீசர் இடித்தழித்த கோவில்களுள் இதுவுமொன்று. இக் கோவில் கி. பி. 1875 ம் ஆண்டளவில் புனருத்தாரணம் செய்யப்பெற்றது. கோயிற் கட்டடத்தில் அநேக சிலாசாஸனங்கள் மிகச் சிறப்பாக உள்ளன. யாத்திரிகர் தங்குமட வசதிகள் உண்டு.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்துசாதனம்

யாழ் விகிர்தி௵ பங்குனி௴ உஅ௳ செவ்வாய்க்கிழமை

# புது வருடப்பிறப்பு

கர வருடம் மாரிபெயும் காசினியு முய்யும்
உர மிகுத்து வெள்ள மெங்கும் ஓடும் — நிரைமிகுத்த
நாலுகாற் சீவன் நலியு நோயால் மடியும்
பாலு நெய்யு மேசுருங்கும் பார்.

அடுத்த வருடமாகிய கரவருடம் வருகிற வெள்ளிக்கிழமை (13—4—51) இரவு 11 மணி 3 நிமிஷம் வரையிற் பிறக்கின்றது; ஆனால் வருடப் பிறப்புக் கருமங்களும் சித்திரை முதலாந் தேதியும் அடுத்த நாளாகிய சனிக்கிழமை அதிகாலைதொடக்கமாகவே கொள்ளப்படும் (திருக்கணித பஞ்சாங்கப்படி வெள்ளிக்கிழமை இரவு 3 மணி 38 நிமிஷம் வரையிற் புதவருடம் பிறக்கின்றது).

இராசரீகத் தொழில்விருத்தி, அதிகாரிகளுக்குச் சுகம், வாகனம் பசு வீடு ஆலயங்களின் விருத்தி, யந்திர சாதனத் தொழில் கூலித்தொழில்களின் விருத்தி, தாழ்ந்த சாதியார் முன்னேற்றம், குடும்பக் கலகம், அரசகலகம் என்னுமிவைகளே இவ் வருடத்திலே தொகுத்துக் கண்ட பலனும்.

இவை இங்ஙனமாக, வருடப் பிறப்புத் தினம் உலகத்திலுள்ள எல்லாச் சாதியார் சமயத்தார்க்குங் கொண்டாடுதற்குரிய விசேட தினமாகும்; இந்தத் தமிழ் வருடப்பிறப்பு தென்னிந்தியருக்கு மாத்திரமல்ல, இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, இந்த இலங்கையிற் கூடிய தொகையினராயிருக்கும் சிங்கள மக்களுக்கும் இத்தமிழ் வருடப் பிறப்பே புது வருடப் பிறப்புத் தினமாகும்; இதனால் இது இக்காலத்திலே தமிழ் சிங்கள வருடப்பிறப்பாக மதித்துக் கொண்டாடப் படலாயிற்று. ஆனால், தமிழ் வருடப்பிறப்பாக விருந்தும், இங்குள்ள தமிழ் மக்களுட் சைவர் வைஷ்ணவர் இந்தியாவிலிருந்து இந்நாட்டில் வந்து குடியேறி யிருக்கும் தமிழருமே யொழிய, இந்நாட்டிலுள்ள தமிழ்க் கிறீஸ்தவர்கள் இத் தமிழ் வருடப்பிறப்பை எவ்வாற்றானுங் கொண்டாடுதற்குச் சிந்திக்கின்றிலர்; இந்த அலட்சியத்திற்குக் காரணம் யாதெனப் புலப்படவில்லை; இவ் வருடப் பிறப்பு அன்றுதொட்டு இன்றுவரை தமிழ் வருடப்பிறப்பெனவழங்கப்பட்டு வருகிறதேயொழிய, சைவ வருடப்பிறப்பு என்றேனும் வைஷ்ணவ வருடப்பிறப்பு என்றேனும் வழங்கப்பட்டு வருதலையறியேம்; இதன்படி தமிழ்மக்களாயுள்ளாரெவரோ, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களெவர்களோ அவர்களனைவரும், சமய பேதமின்றி இவ் வருடப்பிறப்பை ஆநந்தமாகக் கொண்டாடுதல் பிழையாகாதெனலாம்.

ஆனால், தமிழ் வருடப் பிறப்பைத் தமிழராகப் பிறந்தார், தமழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டாரெவரும் ஏகோபித்துக் கொண்டாடாமல் இடையிலே தடுத்துப் பேதப்படுத்தியவர்கள் மேனாட்டிலிருந்து இலங்கை மக்களைக் கட்டியாள வந்த பிருத்தானியரும், அவர்களுடன் சமய பேதஞ் செய்யும்படி வந்த பாதிரிமாருமே யெனலாம்; பிருத்தானிய அரசினர் தங்கள் அதிகாரம் இந்நாட்டில் வந்தவுடனே, ஜனவரி மாசத்திற் பிறக்கும் ஆண்டினைத் தாங்கள் புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடுவதோடமையாது, இந்நாட்டு அரசியல் விஷயம் முதலான சகல விஷயங்களிலும் தங்களுக்குரிய ஆண்டினையே கையாளவும் இந்நாட்டு மக்கள் கைக்கொள்ளும்படி புகுத்தத் தலைப்பட்டார்கள்; பாதிரிமாராய் இங்கு வந்தவர்கள், தங்கள் சமயத்திற்கு இழுக்கப்பட்ட தமிழர்கள் தமிழ் வருடப்பிறப்பை, மகர சங்கிராந்தி யெனப்படுந் தை மாசப்பிறப்பை, தீபாவலியை இவைபோன்ற இன்னுஞ் சில கொண்டாட்ட நாட்களைக் கொண்டாடவொட்டாது தடுத்துவிட்டார்கள். அரசாங்க 'கஜற்' பத்திரிகை முதலிய சாதனங்களில் இவ் வருடப்பிறப்புக்களைத் தமிழ் வருடப்பிறப்பு, சிங்கள வருடப்பிறப்பு எனக் குறித்து வெளியிடுவதை விட்டு, ஹிந்து வருடப்பிறப்பு, பௌத்த வருடப்பிறப்பு எனப் பேதப்படுத்திவிட்டார்கள்; பிருத்தானியர் ஒருவாறு இந்நாட்டை விட்டு அகன்றுவிட்டார்களெனலாம்; இலங்கை இப்பொழுது சுதந்திரம் பெற்றதென்று சொல்லப்படுகிறது; ஆனதால் விடிந்துந்தடுமாற்றமா என்றவாறு, இனிமேலாயினும் இதனைத்தமிழ் வருடப் பிறப்பென்று தமிழரெல்லாரும், சிங்கள வருடப்பிறப்பென்று சிங்களரெல்லாரும் சமயபேதம் பாராட்டாமற் கொண்டாடினல், இலங்கையிலுள்ள இரு பெருஞ் சாதியினர்க்கு மிடையே ஒற்றுமை விருத்தியாகு மல்லவா!

卐

## வருடப்பிறப்பன்று செயற்பாலன

வருடப்பிறப்புத்தினத்தன்று சைவ மக்களாயுள்ளார், புலரிக் காலத்திலெழுந்து ஆவசிய கருமம் முடித்து, ஏதும் புண்ணிய தீர்த்தத்தையேனும் சுத்தநீர் நிலையையேனும் அடைந்து விதிப்படி ஆக்கப்பட்ட மருத்து நீரைச் சிரத்திலும், உடம்பினுந் தேய்த்து ஸ்நாநஞ் செய்து சந்தியாவந்தனை முடித்துக்கொண்டு, அபிடேகம் அர்ச்சனை நிவேதனத்திற்குரிய திரவியங்களைக் கொண்டு ஆசார சீலராய்த் தத்தம் குலதெய்வம் எழுந்தருளிய கோயில்களுக்குச் சென்று திரவியங்களை வழங்கி விசேட அபிடேகம் ஆராதனை செய்வித்துத் தெய்வத்தைப் பத்தியோடு வழிபடுக; இல்லத்திற்கு மீண்டு வந்து சுத்தியோடு முற்றத்திலே சூரியனுக்குப் பொங்கல் செய்து அம் மூர்த்தியை வணக்கஞ் செய்க; உற்றார் உறவினர் அதிதிகள் முதலானேருட விருந்து புனித போசனஞ் செய்குக; ஏழைகளாயுள்ளார்க்கு இயன்றவரையில் தானஞ் செய்க. சிவபுராணம் படித்தல் கேட்டல் நற்பிரசங்கங்களைக் கேட்டல் முதலிய சற்கருமங்களைச் செய்தலில் அற்றைப் பொழுதைப் போக்குக. வருடப்பிறப்பன்று கைவிசேடம் வழங்கவும் கரும ஆரம்பஞ் செய்யவும் சுப நேரமுண்டெனின், அன்றே அங்ஙனம் வழங்கிக் கருமாரம்பஞ் செய்க. மேலும், ஒரு கருமத்தைத் தொடங்கும்போது தூய சிந்தையுடனும் தெய்வ வழிபாட்டோடும் தொடங்கினல், அந்தக் கருமம் அப்பொழுதே பாதி நிறைவேறியதற்குச் சமமாகுமென்னுங் கருத்தமைந்த ஆங்கில பழமொழியொன்றுண்டென்பர். அதன்படி வருடம் பிறக்கின்றதாகிய புண்ணிய தினத்தில் இறைவன் கோயிலையடைந்து "எம் பெருமானே, இப்புதுவருடத்தில் எமக்கு எவ்வகையான இடையூறும் நேராவண்ணம் பாதுகாத்தருளுவதுடன், எம்மிடத்தில் கோபம், குரோதம், அழுக்காறு, அவா, சுயநலங்கருதிக் கருமமாற்றுதல், பிறரைத் தூற்றுதல், புறங்கூறல், ஏமாற்றுதல், வைரஞ் சாதித்தல், உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுதல், தெய்வ நிந்தனை, வேத சிவாகம நிந்தனை முதலான தீய குணங்களிருந்தால், அவற்றையெல்லாம் ஒழித்து எம்மைத் தூய்மையுடையோமாக்கி நடத்தி வைக்க வேண்டும்" என்று இறைவனை வழிபட்டுத் தொடங்குதல் நன்மையாகும்.

---

காலநிலை

---

நேற்று மத்தியானம் இங்கே பெருமழை பெய்தது.

## வானவில்

● யாழ்ப்பாணத்திலே தொன்றுதொட்டுப் பேசியும் எழுதப்பெற்றும் வந்த தமிழ் சுத்தமானதென்ற மதிப்பு தமிழ்நாடு எங்குமுண்டு; ஆனற் காலகதியில் யாழ்ப்பாணத்துத்தமிழ் தூய்மை குன்றிக் கொடுந் தமிழாய்த் திரிந்துவிட்டதெனவும், இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்தவர்களுட் பலர் தென்னிந்தியத் தமிழைப் பின்பற்றியமையேயென்றும் பண்டிதர் சோ. இளமுருகனர் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார்:—

● "யாழ்ப்பாணம் தூய தனிச் செந்தமிழ் வழங்கும் நாடு; யாழ்ப்பாணத்தவருடைய பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் வேறுபாடுகுறைவு. பெரும்பாலும் இலக்கண வரம்பினைப் பேணியே தமது பேச்சினை நிகழ்த்துவர். யாழ்ப்பாணத்து மக்களுக்குத் தமிழைத் தூய்மையாகவும், இனிமையாகவும் வழங்கும் வழக்கம் பிறப்புரிமையானது; கல்வி சிறிதுடையவரும் சிறிதில்லாதவரும் பேசுதல் கேட்போருக்கு இன்பம் பயக்கும்.

அங்ஙனம் தமிழை மிகத் தூய்மையாகப் பாதுகாத்து வந்த யாழ்ப்பாணம், இப்பொழுது தென்னிந்தியப் புரட்சி வெளியீடுகளை அருவிலை கொடுத்து வாங்கிப் படித்து மொழிப் பற்றும் மெய்ப்புலமையும் இழந்து வருகின்றது. தென்னிந்திய சினிமாப் படங்களில் விளையுந் தமிழ் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழையொருபுறம் அழிக்கப் புதுமைப் புரட்சி வெளியீடுகளில் விளையுங் கொடுந் தமிழ் எழுத்துத் தமிழை மறுபுறமழிக்கத் தமிழ் மொழி தப்புதற்கு வழிதுறை காணுது கலங்குகின்றது! ஆங்கிலக் கல்வியிலும் அவர்தம் நாகரிகத்திலும் கொண்டகாதல் தமிழ் மொழிப்பற்றினையடியோடு மறைத்துவிட்டது...."

○ "தமிழ் மொழியிலுள்ள ஒலிக் கூட்டங்கள் அத்தனையும் இயற்கையொலிகளாம். ஏனைய மொழிகளிலுள்ள ஒலிகள் எல்லாம் இயற்கையன்றிச் செயற்கையே பெரிதுமுடைமையால் கெடுதல் இல்லாது இறத்தற்குக் காரணமாயின. தமிழொலிகளெல்லாம் குடிலையென்னுஞ் சுத்த மாயையின் காரியப்பாட்டினுலுண்டாகி மந்திர வொலிகளாயமைந்தன்னவென்று மாணிக்கநாயகர் என்னும் தமிழ்ச்செல்வர் கூறுப, அன்னனமைந்த ஒலிக்கூட்டங்களைச் சிதைத்தற்கும் புதிய வொலிக் கூட்டங்களைப் புகுத்திவிடுதற்கும் துணிந்து நிற்கும் புதுமைப் பைத்தியகாரரின் அறிவின்மையை என்னென்பேம!

கூடப் பெருமானைக் கூடலார்
கோமானைக்
கூடப் பெறுவேனேல் கூ(டு)
என்று—கூடல்
இழைப்பான் போல்க் காட்டி
இழைபா(று)இருக்கும்
பிழைப்பில் பிழைபாக் (கு) அறிந்து

என்பது முத்தொள்ளாயிரத்தில் இருபதாவது செய்யுள். டி. கே. சிதம்பரநாத முதலியார் அருமந்த பழந்தமிழ்ப் பாட்டிலே திருத்தஞ்செய்தருளியதை மேலே காண்க.

"வனவேற்றுமையிறடவுமல்வழி
அவற்றோடுறழ்வும்......" என்னும் நன்னூற் புணர்ச்சி விதிக்கு எத்தனை முரணபாடாக வெழுதினார்! தமிழ்வளஞ்சான்ற பண்டைப் புலவர்கள் செய்த செய்யுள்களிலே திருத்தஞ்செய்தல் உய்தியில் குற்றமென்பதை முதலியார் அறியாவிட்டாலும் தமிழ் மக்கள் அறிதல் வேண்டும். "ல்ப்" என்னும் இரண்டொற்றுக்களையும் காலக்கழிவின்றி யுச்சரிக்க நாவொற்றுகவொலித்தலையும், அவ்வொற்றேறாவிற்கு எளிதாயிருத்தலையும் நண்ணிநின்றிந்து சொன்னும மதிவனம் இல்லா முதலியார் மெய்ப்புலவர் செய்த நூல்களைத் திருத்தப் புகுந்தமை வியப்பினும் வியப்பாம்! பிழைபடியுள் (டு)—(கு) என்னும் குற்றுகரங்களை யடைத்து வைக்கின்றார். "உயிர்வரினுக்குறள் மெய்விட்டோடும்" என்னும் இலக்கண

தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## சிவஞானபோதமும் ஆக்ஷேப நிராகரணமும்

1—ம் பக்கத் தொடர்ச்சி

கள் ஆங்கில பாஷையில் விளக்கி எழுதப்பட்டிருக்கின்றன. இவை சூத்திரங்களுக்கு மெய்கண்டதேவ நாயனாரால் அருளப்பட்ட மேற்கோள் ஏது திருஷ்டாந்தங்களடங்கிய சுருக்க வியாக்கியானத்தையும் இன்றியமையாத இடங்களிலே அச்சாரியருடைய ஆஞ்ஞைப்படி அவரது பிரதம சீஷராகிய அருணந்தி தேவ நாயனாரால் சிவஞானபோதத்துக்கோர் விரிவுரையாக எழுதப்பட்ட சிவஞான சித்தியாரிற்றரப்பட்ட விளக்கங்களையுந் தழுவி இக்காலத்துக்கேற்ற முறையிலே எழுதப்பட்டிருக்கின்றன. விஷயத்தின் மகத்துவஞ் சில சமயங்களில் எளிய பாஷைக்கிடங்கொடாதேனும், இயன்றவரையில் இலகுவான பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றது.

ஆக்ஷேப நிராகரணங்களைப்பற்றி இனிச் சிறிது சொல்வாம். ஆங்கிலத்திலே உயர்தரக்கல்வி கற்று எம். ஏ.; பீ. எச். டீ. என்னும் உயர்ந்த வித்தியா பட்டங்கள் பெற்றவரும், கிறிஸ்தசமயத்தை அனுசரிப்பவருமான ஒரு அம்மையார் சைவ சித்தாந்தத்தைப்பற்றி ஒரு விரிந்த நூல் எழுதியிருக்கிறாரெனத்தெரிகிறது. அந்த நூலிலே சைவசித்தாந்தத்தைத் திரித்துக் கூறி, பல ஆக்ஷேபங்களும் எழுப்பப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அந்நூல் எமது பார்வைக்குக் கிட்டாததால் அதிலே என்னென்ன ஆபாசங்கள் அடங்கியிருக்கின்றனவென்று எமக்குத் திடமாகத் தெரியாது. ஆனாலும் எமது சைவப்பெரியார் நிராகரிப்பதற்காக இச்சிறு நூலிலே அவ்வம்மையார் நூலிலிருந்து எடுத்துக்காட்டிய பகுதிகளிலிருந்து அதிலென்ன ஆபாசங்களடங்கியிருக்கின்றனவென்பது ஓரளவிற்கு அறியக்கிடக்கிறது. எவ்வளவு படித்தாலுந் தாமெடுத்துக்கொண்ட விஷயத்தினுட்கருத்தைத் திரிகரணசுத்தியோடும் அனுபவித் தறியமாட்டாத வித்துவான்கள் அவற்றை எவ்வாறு விளக்குவார்கள், என்பதற்கு இவ்வம்மையாருடைய நிலைமை ஓர் எடுத்துக்காட்டாகும். எமது சமய சாஸ்திரங்களைப் பிறபாஷைகளுக்கு மொழிபெயர்த்தவர்களைப்பற்றிப் பேசுகையில், மேல்நாட்டவர்களாக, கீழ்நாட்டவராக, அவர்களிற் பெரும்பாலாருடைய நிலை எப்படிப்பட்டதென்று சொலசவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது நாம் சிலவருஷங்களுக்குமுன் எழுதியதை இங்கே அனுவதிக்கின்றேம்: "இந்தத் துவிபாஷிகர்களும் நூலாசிரியர்களும் எவ்வளவு படித்தவர்களாயிருந்தாலும், இலக்கிய கலாபண்டிதர்ப் பட்டம் பெற்றவர்களானாலும் சரி, தத்துவஞான பண்டிதர்ப்பட்டம் பெற்றவர்களானாலுஞ்சரி, இன்னுமுயர்ந்த வேறுபட்டவர்த்தனானாலும் ஆராய்ச்சி விற்பன்னரானாலும் இவையெல்லாமொருங்கு திரண்ட மகா வித்துவான்களானாலும், அவர்களெவ்வளவு தூய நோக்கமுள்ளவர்களாயிருந்தாலும், அவர்களுக்குக் கிட்டிய செய்தி ஒருபாற்பட்டதே. மறுபக்கத் கோட்பாடுகளை எடுத்துச் சொல்லும் நூல்கள் அவர்களுக்கு அநேகமாகக் கிட்டவில்லை. ஆன்மா சார்ந்ததன்வண்ணமாமியல்புடைய தாதலாலே இம்மேதாவியரெல்லாம் ஒரு பக்க விவாதங்களையே படித்துவிட்டுத் தாம் படித்தவை எழுதியவை எல்லாம் முழுதுஞ் சரியெனவே விசுவாசமாக நம்பினார்கள்".— இப்பொழுது ஆக்ஷேபங்கள் நகழ்த்திய அம்மையாரும் இப்படி ஆங்கிலத்திற் கிடைக்கும் மொழிபெயர்ப்பு நூல்களிலேயே அதிகம் பயின்றவர் போலத் தோன்றுகிறது அதுவுமல்லாமல் அவர் ஓர் தமிழ் வர்க்கத்தைச் சேர்ந்த கிறிஸ்தவரெனப் புலப்படுகிறது. தமிழ்க் கிறிஸ்தவர்கள் எனைச் சூழ்நிலையில் வளர்கிறார்கள் வசிக்கிறார்கள் என்பது நாமெல்லாமறிந்த விஷயமே. யாரையாவது நிந்திப்பதோ குறை கூறுவதோ நோக்கமாக, நாம் இதை எழுதவில்லை. ஆனால் ஒரு சமயத்திலிருந்து வேறொரு சமயத்துக்கு மாறுபவர்கள் (அவர்கள் சந்ததியாருட்படத்) தங்கள் பழைய சமயத்திற் குற்றங்காண்பது சகஜமல்லவா! தமிழ் நாட்டிலே பிரபல்யமாய் வழங்குவது சித்தாந்த சைவமாதலால் ஓர் தமிழ்க் கிறிஸ்தவர் இந்த மதமெனப் பொதுவாக எண்ணப்படும் ஏகான்மவாதம் முதலியவற்றிலும் பார்க்கச் சைவசமயத்திற் கூடிய குறைகளைக் காட்டுவது நூதனமல்ல. (வரும்)

## திருச்சி ரேடியோ

✻ இசைத்தட்டு

**செவ்வாய் ஏப்ரல் 10**

காலை 7 10 ஸ்தாரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 திருநெல்வேலி என். குத்தாலலிங்கம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 அனந்தலக்ஷ்மி சடகோபன்* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 கண்டசால வெங்கடேஸ்வரராவ்* 2 தமிழில்செய்தி 2 10 ஜானகிராமமூர்த்தி பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 டி. என். லக்ஷப்பா நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருநெல்வேலி என். குத்தாலலிங்கம் பிள்ளை பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் தஞ்சாவூர் ஆர். ராமமூர்த்தி மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 டி. எஸ். லக்ஷப்பா நாகஸ்வரம் 10 முடிவு.

**புதன் ஏப்ரல் 11**

காலை 7 10 ஸ்தாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 பட்டுக்கோட்டை ஏ. பாலசுப்பிரமணியம் பாட்டு ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு

1 சதம்பம்* 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 திருவெண்காடு பி. சுப்பிரமணியபிள்ளை நாகஸ்வரம் 2 தமிழில்செய்தி 2 10 எஸ். மங்களம் வீணை 2 45 முடிவு.

மாலை 5 30 எஸ். மங்களம் வீணை 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 வாடகைவீடு நாடகம் சுகி எழுதியது 7 45 மாகாண முன்னேற்றம் —பேச்சு 8 திருச்சி வாத்திய கோஷ்டி 8 30 என. வி. வசந்த கோகிலம்* 8 45 ஆங்கிலத்தில... 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 பட்டுக்கோட்டை ஏ. பாலசுப்பிரமணியம் பாட்டு 10 முடிவு

**வியாழன் ஏப்ரல் 12**

காலை 7 10 ஸ்தாரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 கோயமுத்தூர் வி. ராஜலக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்திரகானம்* 8 30 முடிவு.

1 பி. லீலா* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 மாரியப்பசுவாமிகள்* 2 தமிழில் செய்தி 2 10 பி. வைரவன் புல்லாங்குழல் 2 45 முடிவு.

மாலை 5 30 பி. வைரவன் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திலசெய்தி 6 10 அறிவிப்புகள 6 15 திருப்புகழ்கோஷ்டிகானம் 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 8 மொழிவளர்ச்சிக்கு அவசியம் 8 15 ராகம், தானம், பல்லவி ஜி. என். பாலசுப்ரமணியம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கோயமுத்தூர் வி. ராஜலக்ஷ்மி பாட்டு 10 முடிவு.

**வெள்ளி ஏப்ரல் 13**

காலை 7 10 ஸ்தாரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 எம். எம். மாரியப்பா பாட்டு 8 ஆங்கிலத்திலசெய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 சதம்பம்* 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 சோமனவல்லி, ஸ்ரீநிவாசன் வயலின்* 2 தமிழில் செய்தி 2 10 காரைக்கால் என் சுந்தராமாகஷி பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 சேலம் என். பட்டுசாமி பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சமூக சித்திரம் தொடர்கதை 7 45 நமது தபால்பெட்டி 8 எம். எம். மாரியப்பா பாட்டு 8 30 குரலலை* 9 ஆங்கிலத்திலசெய்தி 9 15 சேலம் என். பட்டுச்சாமி பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு

## செத்தல் மிளகாய்

சென்னை யாசினர் இலங்கைக்கு 400 தொன் நிறைகொண்ட செத்தல மிளகாய் ஏற்றுமதி செய்வதற்கு அநுமதித்திருக்கின்றனர்; இவற்றுள் பதினாயிரம் மூடை மிளகாய், சித்திரை தமிழ் வருடப் பிறப்பிற்கிடையில் இங்கு வந்து சேருமாம்.

## "அவர்கள் குற்றவாளிகளல்லர்"

சென்ற வாரம் 20, இந்தியர்கள் தக்க அநுமதிப் பத்திரமின்றி இலங்கையில் வந்து இறங்கினார்கள் என்னுங் குற்றச் சாட்டின்பேரில மன்னார் நீதிஸ்தலத்தில் விசாரணை செய்யப்பட்டனர்; விசாரணைப்போது, அவர்கள் பொருட்டு ஏற்பட்ட நியாயவாதியாகிய திரு. A. V. அனகைக்கோன் குறித்த இந்தியர் இலங்கைக் கரையில் எவ்விடத்தேனும் வந்திறங்கினார்களலரெனவும், அவர்கள் கடலிற் சஞ்சரிக்கும்போது, மன்னார்த் துறைமுகக் காவற்காரர்கள் அவர்களை நடுக்கடலிற் போய்ப் பிடித்துக்கொண்டு வந்து சேர்த்தார்களென்றும், ஆதலால் அவர்கள் குற்றவாளிகளல்ல ரென்றும் எடுத்துக் காட்டினார்; நீதிபதி அந்த இருபது பேரையும் நிரபராதிகளெனக் கண்டு விடுதலை செய்தார்.

## "அங்கு மழையில்லாமையால் இங்கு வந்தோம்"

சிவானந்தி, கறுப்பையா, முத்துக்கறுப்பன், கறுப்பையா, வீரபுரம் என்னும் இந்தியர் ஐவரை, அனுமதிப்பத்திரமில்லாமல் இலங்கையிற் புகுந்தார்களென்னுங் குற்றத்தின்பேரில் விசாரணை செய்த அவிச வலை நீதிபதி "நீங்கள் உங்களூரை விட்டு இங்கு வந்த நோக்கமென்ன" என்று கேட்டபோது, 'ஐயா, எங்களூரில் மூன்றுவருட காலமாக மழை பெய்யவில்லை; அதனாற் பஞ்சமதிகம், அங்கே குடியிருக்க முடியாமற்றான் இங்கு வந்தோம்' என்று சொன்னார்களாம். நீதிபதி அவர்களுக்கு ஆறுவாரம் வேலையில்லா மறியல் விதித்தார்.

## வானவில்

2-ம் பக்கத் தொடர்ச்சி

விதியை அறியாத மாணவன் முந்நூறாயிரம் கற்றதற்கு மூன்வரான் என்பது முதலியாருக்குத் தெரியாது போலும்! "கூடென்று"—"நிறையாதிருக்கும்"— என்று புணர்ச்சி செய்யைப்பட்ட வழி வன்றே காதிற்கினிமையும் நாவிற்செளிமையும் பிறக்கின்றன. குற்றுகரங்களைப் பகுத்தும் லகர மெய்க்குரிய புணர்ச்சியைக் கெடுத்தும் திரித்தும் எழுதப்படும் பாடல்கள், 'பா' வென்னும் ஓசையுமைப்பிற்றிரிந்து கெடுதலை முதலியார் அறியார்போலும்! முதலியார், தாமெழுதுஞ் செய்யுள்களை இலக்கண வரம்பழிப்பாராயின், அதனை எவரும் கேளார்; பழந்தமிழ்ச் சான்றோர் செய்தருளிய தெய்வப்பாடல்களைச் சிதைப்பதற்கு முதலியாருக்கு அதிகாரங் கொடுத்தவர் யார்?

## "பிறரை நம்பி வாழ வொண்ணாது"

இந்தியருக்குப் பிரதமர் நேரு சொல்லிய புத்தி

உணவு முதலான பொருள்கள் பொருட்டு இந்தியமக்கள் அந்நியநாட்டினரை நம்பியிருந்தாற் சுதந்திரத்திற்குப் பங்கம் நேருமென்னும் கருத்துப்பட, பிரதமர் நேரு சென்ற வாரம் பின்வருமாறு கூறினார்:- "நாங்கள் எமது வாழ்க்கைக்குரிய பொருள்பண்டங்கள் பொருட்டு அந்நிய நாட்டினரை நம்பியிருந்தால சில சமயங்களில் அவர்கள் சொல்லுகிறபடி நாங்கள் கேட்டு நடக்கவேண்டி நேரும். அவர்கள் தங்கள் அதிகாரத்தை எங்கள் மேல் செலுத்த எண்ணுவார்கள். சுயநம்பிக்கையில்லாமை எங்கள சுயாதீனத்திற்கு இடையூறு விளைக்கக்கூடும். எந்நாட்டிலிருந்தேனும் எங்களுக்குத் தேவையான பொருள் பண்டங்களை நாங்கள் தருவித்தால், எங்கள் நாட்டிலுள்ள வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருட்களை அந்நிய நாட்டினர் தங்களுக்குத் தரும்படி கேட்டால், நாங்கள் பல வருடங்களாக அதிக கஷ்டப்பட்டே இந்தச் சுயாதீனத்தைப் பெற்றேம். அப்படி அரிதிற்பெற்ற சுயாதீனத்தைப் போதிய உணவில்லையென்ற காரணத்தினால் அந்நியருக்கு விற்கலாகுமா?".

தமிழாசிரியக் குழுவினருக்கு

# ஒரு வேண்டுகோள்

[ பண்டித புலவர், த வடிவேலு ]

நமது பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், ஆசிரிய தகுதிப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களும் தமக்களிக்கப்படும் வேதனம், வாழ்க்கைக்குப்போதியதாக இல்லையெனவும், ஆங்கில ஆசிரியர்கள பெறும் வேதன அளவு தமக்களிக்கப்படவேண்டுமெனவும் முறையிட்டுள்ளனர் அவர்கள் தமது தகுதிக்கேற்ப வேதனமளிக்குமாறு கேட்பது நியாயமான கோரிக்கையேயாகும். அவர்கள் தமிழாசிரியர்கள் என்ற நாதத்தில், வித்துவான்களையும் வைத்துப் பேசலானார்கள்; அதுவும் நியாயமானதே ஆயினும் வித்துவான்களின் தகுதியை அளவிட ஆரம்பித்தார்களே அதுதான் அவர்களுக்கடாததேயாகும். எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்தில் நான்காண்டு பயின்று வித்துவான் பட்டம் பெற்றவர்களின் தகுதியை நிர்ணயிக்க ஆரம்பித்த தமிழாசிரியர்கள் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்து நான்காண்டுகள் பயின்ற பி. ஏ. பி. எஸ். ஸி. பட்டதாரிகளின் தகுதியையும் எண்ணிப் பார்த்தார்களில்லை. அவர்கள் மாத்திரம் பயிற்றப்படாமலே பயிற்றப்பட்டவர்களை விடக் கூடுதலான வேதனம் பெறுவதை மறந்தனர்போலும்; அன்றேல் அதனை யறியார்போலும். பல்கலைக்கழகங்களிற் பயின்ற புலவர்கள், வித்துவான்கள் தனியாகச் சங்கங்கூடித் தமக்கும் இலங்கை வித்துவான்களுக்களிக்கப்படும் வேதனமளித்தல் வேண்டுமெனக் கேட்டபின்பாவது பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் தமக்கும பல்கலைக்கழகப் படிப்பிற்கும் வெகுதூரம்; ஆங்கிலத்தில் பயிற்றப்படாமலே பட்டம் பெற்றவர்கள் பயிற்றப்பட்டவர்களை விடக் கூடுதலான வேதனம் பெறுகின்றனர். எனவே நமது தமிழ் வித்துவான்களும் தமது கட்சியை நிறுவட்டும் என எண்ணித் தமது அறிவுடன் மாத்திரம் நின்றிருப்பின் நலமாக இருந்திருக்கும். அதைவிடுத்து வித்துவான்களுக்காகப் பரிந்து பேசுவோர் போன்று கடித்துக்கொண்டு அவர்களுக்கு பாதகவே திட்டம் வகுத்தனர்களே, அதுதான் வருத்தமளிப்பதாகும. பயிற்சிபெறுத ஒரு வித்துவான், பயிற்றப்பட்ட தமிழாசிரியரைவிட மட்டமாகும் என மதிப்பீனமான திட்டம் வகுத்த ஆசிரியர்களுக்குத்தான் எனது வேண்டுகோளை விடுக்கின்றேன். ஒரேயொரு வார்த்தை:- பல்கலைக்கழகப்பட்டங்களின் தரத்தை மதிக்கும் ஆற்றல் தங்களுக்கில்லையெனவே தாங்கள் புலவர் வித்துவான்கள் விஷயத்தில் தலையிடாதீர் என்பதேயாகும். இதுவே எனது தாழ்மையான வேண்டுகோள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சண்டிக்குளி ஆசீர்வாதம் செல்வநாயகம் பெண் பிறின்செஸ் கிருபை மலரின் ஆஸ்திக்கு
சண்டிக்குளி ஆசீர்வாதம் செல்வநாயகம் தத்துவகாரன்

இல. 607 Testy.

எதிராக

சண்டிக்குளி தற்போது
1. பிறின்ஸ் செல்வகுமார்
செப்பல் லேன் நாக்கொடை
2. யோசேவ் ஞானதநாயகம்
எதிர்வாதிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 607-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் பொருள்களை, 1951-ம் ஆண்டு ஏப்றில் (சித்திரை) மாதம் 20-ந் திகதி (20-4-51) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு வளவுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொருள்களின் விபரம்
1. மூன்று சோடி காப்புகள்
2. ஒரு புறோச் (கல்பதித்தது)
3. ஒரு கைக்கடிகாரம் பவுண் சங்கிலியுடன்
4. ஒரு கூறைச் சேலை

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.

தெல்லிப்பழை
30-3-1951.
M. 5 10—4—51.

## கீரிமலைத் தீர்த்தக் கேணி

சில மாசங்களாகக் கீரிமலையிலுள்ள சமுத்திர சங்கம தீர்த்தக்கேணி பழுது பார்க்கப்பட்டு வந்தமையினால், மக்கள் போய் நீராடல் இயலாதிருந்தது. ஆனால் பழுதுபார்த்தல்வேலை நிறைவேறியபின், சென்றவாரம், மந்திரி S. W. R. D பண்டாரநாயக மேற்படி கேணியை ஸ்நானஞ் செய்வோர்பொருட்டுத் திறந்து விடலாயினர்; இனிமேல் தொன்மை போல் யாருஞ் சென்று கீரிமலைத் தீர்த்தக்கேணியில் முழுகுதலாகும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோக்குவில் கிழக்கு சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு வழக்காளி
எதிராக
கோக்குவில் கிழக்கு செல்லப்பா விசுவலிங்கம் எதிராளி
இல. 5711

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 5711-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1951-ம் ஆண்டு ஏப்பிறில் (சித்திரை) மீ 28-ந் திகதி (28-4-51) சனிக்கிழமை முற்பகல் 9½ மணி தொடக்கம் அந்தக் காணிக்கருகாமையில் றோட்டில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 1203-29-ம் இதில் ரூபாய் 1000-க்கு 12-7-49 திகதி தொடக்கம் 16—8—49 திகதி வரைக்கும் 100க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் பூழத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு ஐந்துவீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 153-17 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பதி மானிப்பாய்க் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிலை "ஊமைகாடு" நிலப்பரப்பு 3¾ம் எல்லை கிழக்கு செல்லையா பெண் பொன்னம்மாவின் ஆதனம், வடக்கு றோட்டு. மேற்கு செல்லப்பா விசுவலிங்கத்தின் ஆதனம், தெற்கு கந்தையா பெண் பாக்கியத்தின் ஆதனம், இதடங்கலும்.

முற்பதிவு E 252/153

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை
2—4—1951.
M 3, 10—4—51

## பண்ணை ஆயப்பணம்

மேற்படி ஆயப்போக்கு வரத்துக் கூட்டுறவுச் சங்கம், 'மாருதப்புரவி' என்னும் புதிய யந்திரம் வந்ததும், முன்னரிலும் கூடியபணத்தைச் சகல வாகனங்களுக்கும் விதித்து அறவிடத் தீர்மானித்துவிட்டது. இந்த ஒழுங்கு, சனம் போக்குவரத்து மந்திரி, ஆயவரியையிட்டுச் செய்த வாக்குறுதிக்கு முற்றும் மாறானதாகும். இப்பொழுது அறவிட்டுவரும் பணமே அதிகப்படியாயிருக்கிறது; இது யுத்தகாலத்திற் சமயோசிதமாக ஏற்பட்டுள்ளது. மற்றும் ஆயங்களிலும் குறைந்த தாமுள்ள இந்த ஆயத்திலே பணத்தைக் கூட்டி அறவிடுவது ஏழைத் தீவு மக்களை மிகவும் வருத்துவதாகும். இதற்கு எவ்வளவு வருவாயிருந்தாலும் இன்னும் போதாது என்று அரசினரிடம் நன்கொடைப் பணமும் பெறுகிறார்கள் இப்படியானால் இதை அரசினரிடம் ஒப்புவித்தல் நன்மையாகும்.

வேலணைப் பண் போக்கு வரத்துத் திருத்தியமைத்த பிற்பாடு, யாழ்ப்பாணம், பண்ணை, வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு முதலிய பகுதிகளுக்குப் பெருந்தொகையான சனங்களும், வாகனங்களும் பிரயாணஞ்செய்து வருகின்றார்கள். இவைகளைப்பற்றி ஆலோசிப்பதற்கு, யாழ்ப்பாணத் தீவுப் பகுதி மகாசனசபை ஓர் பகிரங்கக் கூட்டத்தை விரைவிற் கூட்டுவதாகு நிச்சயித்திருக்கிறது. இதிற் சம்பந்தப்பட்ட யாபேரும் குறித்த கூட்டத்திற்குச் சமூகஞ் செய்து மேற்படி மகாசன சபை யாருடன் ஒத்துழைப்பார்களாக.

நா. பொன்னுத்துரை
காரியதரிசி,

## சிவஞானபோதம்
(ஆங்கிலத்தில்)
**(An Outline of Sivagnanabodham)**

With a rejoinder to a Christian Critic என்னும் ஆங்கில நூல் வெளிவந்துவிட்டது. இது சிவஞானபோதப்பொருளைத் தெளிவாகக்கூறுவது. அதிவில்லாதவைகளாய்ச் சைவசித்தாந்தத்தை விரிவாக அறிதற்கு வேண்டியனவாயுள்ள பல விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிறிதவரொருவர் சைவசித்தாந்தத்தைப் பற்றிச் செய்த முப்பத்தேழு கண்டனங்களை உறைப்பாகக்கண்டிப்பது. இக் கண்டனங்கள் சைவசமயத்தின் றுட்பங்களை விளக்குவன. இதிலே சிவஞானபோதச் சூத்திரங்களும் அவற்றின் பதவுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன; தர்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளுடைய முகவுரையை உடையது ...

இதன் ஆசிரியர்
யாழ்ப்பாணம் புலோலி சைவப்பெரியார்
சு. சிவபாதசுந்தரம் B. A.
விலை ஒன்றேகால் ரூபா
எம்மிடத்திலும் ஏனைய பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்.

மனேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை
இந்துசாதனாலயம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்,
23-3-51.

மு குமாரசாமி
தனாதிகாரி
தீவுப்பகுதி மகாசனசபை.


## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

### 60-ம் ஆ. வச்சிர விழா

# கா ணி வ ல்

மே மீ 2 ந்உ — 13 ந்உ

உலகப் பிரசித்தி பெற்ற மாயாவி
கோஜியா பாஷாவின்
மாயாஜாலங்கள் ஆடல்பாடல்கள் அருங்கலைக்காட்சிகள்
மின்சாரதீப வேடிக்கை விநோதங்கள்
உள்ளங் கவரும் இன்னும் அனேக காட்சிகள்!


## ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு வெள்ளாத்தெருவில் உத்தரவுபெற்று அடைவு பிடிக்கும் எஸ். செல்வத்துரையின் கடையில் அடைவு வைத்துத் தவணை தப்பியிருக்கும் பின்வரும் நகைகளை 1951-ம் ஆண்டு ஏப்றில் (சித்திரை) மாதம் 11-ந் திகதி (11-4-51) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் கடையிலிருந்து எடுபட்ட நகை நீக்கி மிகுதி ஏலத்தில் விற்கப்படும்.

நகையின் விபரம்

| இ. | திகதி | ரூ. | நகை விபரம் | பெயர் | விலாசம் |
|---|---|---|---|---|---|
| 450 | 9-1-48 | 60 | பென்றன் | ம. செல்லன் | வெள்ளாத்தெரு. |
| 671 | 8-6-48 | 10 | 1 சோடி ஓலை, 1 மோதிரம் | இ. பஞ்சாட்சரம் | வண். கிழக்கு |
| 700 | 23-8-48 | 40 | கல் புறோச் | பொ. இராசரத்தினம் | பிரபக்குளம் |
| 448 | 8-1-48 | 20 | கல்வைத்த மோதிரம் | M. சின்னையா | தொல்புரம் |

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,
2-4-1951
M. 2, 6, 10-4-51.


## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மூலதனம் | | 7, 500, 000-00 |
| கொடுக்கவிருக்கும் | ,, | 4, 500, 000-00 |
| கொடுபட்ட | ,, | 4,500, 000-00 |
| நிலைதரமான சேமநிதி | | 3, 000, 000-00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ட் கம்பனி.
லண்டன் காரியாலயம்:- 4-6-8 லுட் கேட் சிர்கஸ் லண்டன். E. C. 4.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்), வதுளை மட்டக்களப்பு.
யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242 ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்
வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகளை இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்: அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.
பிறநாட்டுவிவகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி, கொழும்பு.
இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

L P. N சிங்கம்
ஏஜெண்டு


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday April 10, 1951